[1978 செப்டம்பர் 18

ஜவ்வாது மலைப் பகுதியில் 'செட்டில்மென்ட்'

*வினா எண் 181—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஜவ்வாது மலையின் 1902 செட்டில்மென்டினை திருத்தி புதிய செட்டில்மென்டு ஏற்படுத்த கோரி ஜவ்வாது மலைவாழ் முன்னேற்ற சங்கம் அரசுக்கு விண்ணப்பம் செய்து கொண்டுள்ளதா?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைஎன்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இப்படிப்பட்ட ஒரு விண்ணப்பத்தை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள், அதனுடைய நகல் எனக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. ஆகவே, இந்த செட்டில்மென்ட்டை மாற்றி அமைப்பதின் மூலமாக அங்குள்ள மலைவாழ் மக்கள் பல்வேறு வகையில் நல்லமுறையில் வாழ வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இதை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அந்த மனு அரசுக்கு வரவில்லை என்பதற்காக இதிலிருந்து அரசு தப்பித்துக் கொள்ள நிச்சயமாக எண்ணவில்லை. இப்படிப்பட்ட நிலங்கள் ஜவ்வாது மலையாக இருந்தாலும் சரி, வேறு எந்த இடமாக இருந்தாலும் சரி, இவற்றை எப்படியெல்லாம் சீர்செய்வது என்று அரசு ஆலோசித்து வருகிறது. இதற்கான நடவடிக்கைகளையும் அரசு உடனடியாக எடுத்து வருகிறது. அந்த முறையில் ஜவ்வாது மலையிலும் நடவடிக்கைகள் எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லணை அருகில் முதலைகள் சரணாலயம்

*வினா எண் 182—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கல்லணைக்கு அருகில் கிளிக்கூடு கிராமத்தில் முதலைகள் சரணாலயம் தற்போது உள்ளதா?

(ஆ) இல்லையெனில் அதனை ஏற்படுத்தும் உத்தேசம் அரசிற்கு உண்டா?